XSEED
idiscoveri FOUNDATION FOR LIFE
UNLEASH YOUR MIND®

Publication : Murasoli

Date : Nov 19, 2011

# கல்வித்தரத்தை மேம்படுத்தும் கருத்தரங்கு

சென்னை, நவ. 18- ஆண்டுதோறும் எக்ஸீட் நானையா பள்ளிகள் 2011 கருத்தரங்கு மூன்றாவது ஆண்டாக நடைபெற்றது. சிறந்த கற்பிக்கும் வழிமுறைகள் மற்றும் திட்டங்கள் மூலம் கல்வித் தரத்தை மேம்படுத்த வேண்டியதன் தேவை குறித்து முன்னோடி கல்வியாளர்கள் வலியுறுத்தினார்கள். "எல்லைகளைக் கடந்த கல்வி" என்ற தலைப்பில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் புதுடெல்லி, சென்னை, மும்பை, ஹைதராபாத் ஆகிய நகரங்களைச் சேர்ந்த 1500 பள்ளித் தலைவர்கள், தொழிலதிபர்கள் கலந்து கொண்டனர்.

இந்தக் கருத்தரங்கில் நாட்டில் வகுப்பறை கற்பித்தலில் ஒரு புரட்சியை உருவாக்க வேண்டும் என்று உறுதி பூண்டுள்ள கல்வியாளர்கள், தொழிலதிபர்கள் மற்றும் சிந்தனையாளர்கள் கொண்ட ஒரு குழு இடம் பெற்றிருந்தது. இந்தக் குழு பள்ளித் தரத்துக்கு எது அதிக முக்கியம் சிறந்தவளம் அல்லது மேம்படுத்தப்பட்ட வழிமுறைகள் என்பது குறித்து சென்னை ஐ.ஐ.டி இயக்குநர் பேராசிரியர் பாஸ்கர் ராமமூர்த்தி, அமெரிக்கன் சர்வதேச பள்ளி தலைவர் ஆண்ட்ரூ எ.ஹூவர், பாடத்திட்ட ஸ்பெஷலிஸ்ட் டாக்டர் கீதா ஐயர், யுன்செப்ஸ் கல்வி ஸ்பெஷலிஸ்ட் டாக்டர் அருணா ரத்னம், பிரிட்டிஷ் கவுன்சில் ஆஃப் இந்தியாவின் டாக்டர் தேபன்ஜன் சக்ர வர்த்தி ஆகியோர் முன்னிலையில் ஆலோசித்தது.

உயர்ந்த தரத்திலான கற்றுக்கொள்ளும் முறை தலைமைப் பண்பு, மதிப்பீட்டுத் திறன் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கும் இடிஸ்கவரி கல்வி ஒரு புதுமையான முன்னணி நிறுவனமாகும். இதன் முதன்மையான திட்டமான எக்ஸீட், தரமான கற்பித்தல் மற்றும் கற்றுக் கொள்வதற்கான விரிவான தீர்வாகும்.

ஹார்வர்ட், கேம்பிரிட்ஜ், ஐஐடியின் முன்னாள் மாணவர்கள் இதை வழி நடத்துகிறார்கள். முன்னாள் பள்ளி முதல்வர்கள், கல்வி நிபுணர்கள் மற்றும் குழந்தை உளவியலாளர்கள் இதன் பாடத் திட்ட தயாரிப்பில் பங்கு கொண்டுள்ளனர்.

www.xseed.in